©

தமிழ்நாடு அரசு 2023 | கையெழுத்துத் தொடர்

## பொது (பல்வகை)த் துறை

**அரசாணை (நிலை) எண்.528 , நாள் 31 .08.2023**

**சோபகிருது, ஆவணி – 14, திருவள்ளுவர் ஆண்டு–2054**

விடுமுறை நாட்கள் – 2023–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18–ஆம் நாள் "விநாயகர் சதுர்த்தி" கொண்டாடுவதற்கான தேதி மாற்றம் – திருத்திய ஆணை – வெளியிடப்படுகிறது.

---

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.638, பொது (பல்வகை)த் துறை, நாள்: 11.10.2022.
2. ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை கடித எண்.50008/2021/கே.4, நாள் 19.08.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விநாயகர் சதுர்த்தி கொண்டாடுவதற்கு 2023–ஆம் ஆண்டு செப்டம்பர் 17–ஆம் நாள் பொது விடுமுறை என 1881–ஆம் ஆண்டு செலாவணிமுறிச் சட்டத்தின் படி (Negotiable Instrument Act 1881) அறிவிக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள், பல்வேறு திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்ட அறிவிக்கைகளின்படி, "விநாயகர் சதுர்த்தி" 17.09.2023 (ஞாயிற்றுக்கிழமை)–க்கு பதிலாக 18.09.2023 (திங்கட்கிழமை) கொண்டாடப்பட உள்ளது என தெரிவித்துள்ளார்.

3. எனவே, மேற்கண்ட பொருள் தொடர்பாக அரசு கவனமுடன் பரிசீலித்து, "17.09.2023 ஞாயிற்றுகிழமை விநாயகர் சதுர்த்தி பண்டிகை" அறிவிக்கப்பட்டுள்ள பொது விடுமுறைக்கு பதிலாக "18.09.2023 திங்கட்கிழமை விநாயகர் சதுர்த்தி" கொண்டாடுவதற்கு பொது விடுமுறை அறிவிக்க 1881–ஆம் ஆண்டு செலாவணிமுறிச் சட்டத்தின் படி (Negotiable Instrument Act 1881) அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, கீழ்க்கண்ட அறிவிக்கை 01.09.2023 அன்று அரசிதழில் வெளியிடப்படும்.

த.பி.பா

**அறிவிக்கை**

மத்திய அரசின் உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் 08.06.1957 நாளிட்ட பொது–1, 20–25–26–ஆம் எண் அறிவிக்கையின்படி 1881–ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) 25–ஆம் பிரிவில் "விளக்கம்" என்பதன் கீழ் விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு 17.09.2023 (ஞாயிற்றுக்கிழமை)–க்கு பதிலாக 18.09.2023 (திங்கட்கிழமை) பொது விடுமுறை நாளாக கருதப்படும் என தமிழ்நாடு அரசு இதனால் அறிவிக்கிறது.

4. மேலே அறிவிக்கையிடப்பட்ட பொது விடுமுறை நாள், மாநில அரசின் அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள் / கழகங்கள் / வாரியங்கள் முதலியவற்றுக்கும் பொருந்தும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம்,
சென்னை–79. (தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)
அனைத்து அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம்,
சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–9.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை–9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
அனைத்து நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.
அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள்/ கழகங்கள் / அனைத்து
நகராட்சிகள்/அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் /
அனைத்து பேரூராட்சிகள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை–1 மற்றும் ஏனைய முன்னணி வங்கி
நிறுவனங்கள்.
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை–9.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.

தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை–18.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம், திருவரங்கம் கட்டிடம்,
143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை–28.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, மதுரை.
இயக்குநர், செய்தி மற்றும் பொதுத் தொடர்பு, தலைமைச் செயலகம்,
சென்னை–9.
தலைமைச் செயலாளர், புதுச்சேரி அரசு, புதுச்சேரி.
அனைத்து முன்னணி (ம) சமய நிறுவனங்கள்.
அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பணி நிறுவனங்கள்.
மாநிலத்திலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்கள்.
அனைத்து வர்த்தக மன்றங்கள்.
அனைத்து மத்திய அரசு அலுவலகங்கள்.
தலைவர், துறைமுக பொறுப்புக் கழகம், சென்னை–1.
துணைத் தலைமை தகவல் அதிகாரி, செய்தி தகவல் அமைப்பு,
மத்திய அரசு, சென்னை–6.
இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை–9.

**நகல்**

மாண்புமிகு பேரவைத் தலைவரின் நேர்முக உதவியாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அமைச்சர்களின் அனைத்து முதுநிலை நேர்முக உதவியாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், தலைமைச் செயலகம்,
சென்னை–9.
செயலாளரின் தனிச்செயலர், பொதுத்துறை, சென்னை–9.
அரசாணை (நிலை) எண்.682/பொது (பல்வகை(2))த் துறை, நாள் 11.10.2022.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//**

31/8/23

**பிரிவு அலுவலர்**

31.8.2023